## சுருக்கம்

சிலை நிறுவுதல் - நீதிபதி திரு எஸ். மோகன் அவர்களின் தலைமையிலான உயர்மட்டக் குழுவின் பரிந்துரைகளை கருத்தளவில் ஏற்று அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுக்கும் அறிவுரை வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது.

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நதி 5) துறை**

**அரசாணை (நிலை) எண்: 186** **நாள்: 21.9.1998**

**படிக்கப்பட்டது:**

அரசு செயலாளர் பொது (சட்டம் மற்றும் ஒழுங்கு) துறை நேர்முக கடித எண் 501/ச(ம)ஒ98-14, நாள் 8.7.98.

-----

**ஆணை:**

நீதிபதி திரு எஸ். மோகன் தலைமையிலான உயர்மட்டக் குழு, பாதுகாப்பு இல்லாமல் பல இடங்களில் நிறுவப்பட்டுள்ள சிலைகள் சிதைக்கப்படுவது வகுப்புக் கலவரங்களுக்கு வழி வகுக்கிறது எனச் சுட்டிக்காட்டி பின்வரும் பரிந்துரைகளை செய்துள்ளது:-

(1) அரசாங்கமோ அல்லது தனிப்பட்டவர்களோ எந்த தலைவருக்கும் சிலை நிறுவுதல் கூடாது.

(2) ஏற்கனவே நிறுவப்பட்டுள்ள சிலைகள் சரியான முறையில் பாதுகாக்கப்பட வேண்டும்.

(3) முடிந்தால், ஏற்கனவே நிறுவப்பட்ட சிலைகளை பாதுகாப்பான இடங்களுக்கு கொண்டு செல்லலாம்.

2. மேலே குறிப்பிடப்பட்ட பரிந்துரைகளை பரிசீலித்த அரசு அவற்றை ஏற்று, தமிழ்நாட்டிலுள்ள அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுக்கும் பின்வரும் அறிவுரைகள் வழங்கி ஆணை வெளியிடுகிறது:

(1) அரசாங்கமோ அல்லது தனிப்பட்ட நிறுவனங்களோ எந்த தலைவருக்கும் சிலை நிறுவுதல் கூடாது.

(2) ஏற்கனவே நிறுவப்பட்டுள்ள சிலைகள் பாதுகாக்கப்பட வேண்டும்.

(3) ஏற்கனவே நிறுவப்பட்ட சிலைகள் சீர்குலையாமலிருக்க, அச்சிலைகளை பாதுகாப்பான இடங்களுக்கு கொண்டு சென்று திரும்பவும் நிறுவுவது தேவையெனக் கருதப்பட்டால், இது குறித்து அரசிடம் ஆணை பெற்றபின் மாற்றி அமைக்கலாம்.

3. மேற்படி ஆணையை அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுக்கும் தெரியப்படுத்துமாறு நகராட்சி நிர்வாக ஆணையர், மற்றும் பேரூராட்சிகள் இயக்குநர் ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

(ஆளுநரின் ஆணைப்படி)

எஸ். மாலதி
அரசுச் செயலாளர்.

பெறுநர்

நகராட்சி நிர்வாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை - 5.

பேரூராட்சி இயக்குநர், குறளகம், சென்னை 108.

ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை 3.(வழியாக மாமன்றத் தலைவர்)

ஆணையர்கள், கோயம்புத்தூர்/மதுரை/சேலம்/திருச்சிராப்பள்ளி/திருநெல்வேலி மாநகராட்சிகள். (வழி மாமன்றத் தலைவர்).

நகல்:

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பொது) துறை, சென்னை -9.

உள்ளாட்சி நிதிக் கணக்குத் தணிக்கை இயக்குநர், சென்னை 108.

அனைத்து துறை செயலாளர்கள், தலைமைச் செயலகம், சென்னை 9.

அனைத்து துறைகள், தலைமைச்செயலகம், சென்னை - 9.

பொது (ச (ம) ஒ) துறை, சென்னை -9.

முதலமைச்சரின் அலுவலகம், சென்னை - 9.

ஊரகவளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.

இருப்புக் கோப்பு / உதிரி நகல்கள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

ஆ அண்ணாமலை 2/2/98
பிரிவு அலுவலர்.